## அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) செயலாணைகள்
## பிறப்பிப்பவர்: திரு.நா.சத்தியமூர்த்தி

ந.க.எண்.ஆ2/2563/2020 நாள்: .12.2020

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள்- மனைகள் வரன்முறைப் படுத்துதல் திட்டம் 2017- விருதுநகர் மாவட்டம் - அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - சிதம்பராபுரம் ஊராட்சி - செட்டிகுறிச்சி கிராமம்- புல எண்கள்: 485/3,10ஏ,10பி மற்றும் 11-ல் 1.97 ஏக்கர் (7972.29ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைகள்- விருதுநகர், நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டது- உரிய அரசுத் தலைப்புகளில் கட்டணத்தொகை செலுத்தப்பட்டது- 43 தனி மனைகளை வரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை நிலை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை , நாள்: 04.05.2017
2.அரசாணை நிலை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள்: 13.10.2017
3.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,விருதுநகர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள் எண்.ந.க.எண்.230/2020 விருமா, நாள்.16.10.2020 மற்றும் மனைப்பிரிவு வரைபடம்.
4.திரு.V.சுந்தரமூர்த்தி , அருப்புக்கோட்டை என்பவரது விண்ணப்பம் நாள்: 29.10.2020
5.இவ்வலுவலக கடிதம் ஆ2/2563/2020 நாள்.30.11.2020

*********

**ஆணை**

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சிதம்பராபுரம் ஊராட்சி , செட்டிகுறிச்சி கிராமத்தில் புல எண்கள்: 485/3,10ஏ,10பி மற்றும் 11-ல் 1.97 ஏக்கர் (7972.29ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனை பிரிவிற்கு **ம.வ.(மு)/மாந.ஊஅ(விருமா) எண்.08/2020** என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும், விதிமுறைகளின்படி வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் பெற்று உள்ளாட்சியால் மனை வரன்முறை ஆணை வழங்கப்படலாம் எனவும் பார்வை (3)ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காணும் கடிதம் மூலம் கட்டணங்கள் செலுத்த அறிவுறுத்தப்பட்டது. கீழ்காணுமாறு கட்டணங்கள் செலுத்தி மனைப்பிரிவு உரிமையாளரால் இரசீது சமர்ப்பிக்கப்பட்டது.

| கட்டண விபரம் | மனைகள் விபரம் | செலுத்தப்பட்ட தொகை ரூ. | கட்டண ரசீது விபரம் |
|---|---|---|---|
| பரிசீலனைக் கட்டணம் ரூ.500/ வீதம் | 43 எண்ணம் | 21,500 | NHMP66688247770 நாள்.16.9.2018 PUR26820764195 நாள்.23.10.2018 |
| வரன்முறை கட்டணம் ரூ45/ச.மீ | பரப்பு : 4569.56 ச.மீ | 2,05,630 | ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, அருப்புக்கோட்டை நாள்: 2.12.2020 |
| வளர்ச்சி கட்டணம் ரூ.25/ச.மீ | பரப்பு : 4569.56 ச.மீ | 114,239 | சிதம்பராபுரம் ஊராட்சி பல்வகை ரசீது எண்: 89461/2.12.2020 |

மேற்படி கட்டணங்கள் செலுத்தப்பட்ட விபரங்கள் சரிபார்க்கப்பட்டது. எனவே அரசாணை எண்.172 ன் படி நிபந்தனைகளுக்குட்பட்டு **மனை எண்கள்** : 1 முதல் 5,7,16 முதல் 30, 32 முதல் 36,39 முதல் 46,48 முதல் 56 வரை மொத்தம் 43 தனிமனைகளை மட்டும் மனைவரன்முறை அங்கீகாரம் செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. அரசாணை நிலை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள்: 13.10.2017-ல் விதி எண்.7(g)(ii)-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும்

பொதுபயன்பாட்டிற்கான திறந்தவெளி ஒதுக்கீடு(Open Space Reservation) இடங்கள் அனைத்தும் சிதம்பராபுரம் ஊராட்சியின் நிர்வாக கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும்.

2. நில உரிமம் குறித்த மனைப்பிரிவு ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு வரன்முறை ஆணை வழங்கப்பட்டதால் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட வரன்முறை ஆணை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

3. வரன்முறை ஆணை வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் சுட்டியுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்றபடுவதை கட்டட வரைபட அனுமதி வழங்கும் முன்னர் சிதம்பராபுரம் ஊராட்சி நிர்வாகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. வரன்முறை ஆணை வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடம் ஒன்று ஆணையுடன் சிதம்பராபுரம் ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்:

திரு.V,சுந்தரமூர்த்தி
1/1153,அன்பு மாடல் நகர்,
அருப்புக்கோட்டை,
விருதுநகர் மாவட்டம்.

நகல்:

1. ஊராட்சி மன்ற தலைவர், சிதம்பராபுரம் ஊராட்சி ,
(மனைப்பிரிவு வரைபடம் ஒன்று ஆணையுடன் சார்பு செய்யப்படுகிறது)
2. விருதுநகர் மாவட்ட நகர ஊரமைப்பு, துணை இயக்குநர், விருதுநகர்,
3. மாவட்ட ஆட்சியர் (ஊராட்சிகள் பிரிவு), விருதுநகர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. சார்பதிவாளர்,சார்பதிவாளர் அலுவலகம், பந்தல்குடி.